காவ்யா



கவிதைகள்

முல்லை அமுதன்

# யுத்த காண்டம்

# யுத்தகாண்டம்

முல்லை அமுதன்

காவ்யா

□ YUTHA KANDAM
Collection of New verses

□ © Mullai Amuthan

□ First Edition: December 1989

□ Cover Design : Santhanam

□ Published by Lakshmi Sundaram
Kaavya Books
16, 17th E Cross
Indiranagar II stage, Bangalore - 38

□ Price : Rs. 8.00

RASAKILI PRINTERS
12, First Main Road, Nehru Nagar, Madras-600 020.

# பதிப்புரை

''தமிழன் என்று சொல்லடா
தலைநிமிர்ந்து நில்லடா''

எனும் எண்ணம், தமிழகத்துக்கு உள்ளே இருப்பவர்களை விட வெளியே இருப்பவர்களையே அதிகமாகப் பாதித்துள்ளது. குறிப்பாக இலங்கை இதற்கொரு சான்று.

1982ல் என்று நினைக்கிறேன். நான் எனது கல்லூரி மாணவர்களோடு ஈழச் சுற்றுலா போனபோது, ஒரு வைகறை வேளையில் கொழும்பு ரயில் நிலையத்தில் இறங்கி வெளியே வந்த என் கண்ணில் பட்டது 'புகையிரத நிலையமும்', 'மக்கள் வங்கி'யுமே. அந்தத் தமிழ் என்னையும் தாக்கிற்று. அங்குள்ள தமிழ்க் கவிஞர்களைத் தொடர்ந்து படித்து வருகிறேன். சேரன், சிவசேகரம், மேமன்கவி, நுஃமான், செயபாலன்... என்ற வரிசையில் இப்போது முல்லை அமுதனும்.

எரிந்து கொண்டிருக்கும் ஈழத்தின் நாக்குகளாக இவர்கள். ஏற்கனவே ஈழக்கவிஞரான சிவசேகரத்தின் 'நதிக்கரை மூங்கில்' வெளியிட்ட நாங்கள் இப்போது முல்லை அமுதனின் 'யுத்த காண்டத்தை' உங்களுக்கு அறிமுகப் படுத்துகிறோம்.

அவரை நான் நேரில் பார்க்கவில்லை எனினும் அவரது எழுத்துக்கள் என்னுடன் உறவாடி வருகின்றன. அந்த நல்ல நண்பரை வாழ்த்தி வரவேற்கிறோம்.

இதற்குச் சந்தானத்தின் ஓவியம் மிகப் பொருத்தமாயிற்று. இராசகிளியின் அச்சும் அழகு சேர்க்கிறது. அனைவருக்கும் நன்றி.

டாக்டர் சு. சண்முகசுந்தரம்
காவ்யாவுக்காக.

## என்னுரை

நீண்டதொரு வனவாசத்திற்குப் பிற்பாடு இந்தப் புறப்பாடு...
மீண்டும் புதிதாய்ப் பிறந்ததால் ஒரு சிரிப்பு... குதுகலம்.
முகவரி தேடிக் கொண்டிருக்கும் வாசகர்களுக்கு
முகதரிசனம் தரத்துடிக்கின்ற இந்த இளையவனின் பிரவேசம்.
அந்த—
வாசல் கதவு திறந்து வரவேற்கிறது உங்களின் காவ்யா!
ஆத்மாக்களின் ராகங்கள்
அழிந்து விடக் கூடாது என்பதிற்காய்
என்னில் ஒரு வேகம்... அவசரம்...
நித்யகல்யாணி
புதிய அடிமைகள்
விடியத்துடிக்கும் ராத்திரிக்குப் பிற்பாடு
ஒரு—
யுத்தகாண்டம் இது...
தட்டிக் கொடுப்பதும்...தடி கொண்டடிப்பதும்
உங்கள் கைகளில்...
விமர்சனம் நோக்கி...
எனது படையலுடன் நானும் காத்திருக்கிறேன்.

நன்றியுடன்

முல்லை அமுதன்
(இ. மகேந்திரன்)
27.8.89

P.O Box 17271
JEDAAH 21484
K.S.A.

காணிக்கை :

ஈழத்து ரத்த புஷ்பங்களுக்கு

இவரது ‘விடியத்துடிக்கும் ராத்திரி’ களுக்கான விமர்சனங்கள்.

— இவன் — முல்லை அமுதன்.

— இந்த எரிசரக் கவிதைகள், கருக்கொண்ட எரிமலை இதயத்தோன்.

— ஆழ்ந்த சமூக உணர்வும், மனிதாபிமானமும் இவன் கவிதைகள் அடிநாதம்

— புதிய கோணம், புதிய சிந்தனை இளைய தலைமுறையின் எழுச்சி எண்ணங்கள் இவன் கவிதைகளில் ஜீவத்துடிப்புடன் ஒளிர்கின்றன.

— விமர்சனங்களை எதிர்நோக்கும் இதயமுள்ள படைப்பாளி.

— கவிதை மட்டுமல்லாது இலக்கியத்தின் பல்வேறு கோணங்களிலும் இவன் பார்வை பரந்து வருகிறது.

— இவனின் எதிர்காலப் படைப்புக்களின் ‘அணு’க் கோலங்களை, விடியத்துடிக்கும் ராத்திரிகள் நிர்மலமாகவே காட்டுகிறது.

— இவன் கவிதைகள் வைரம் மிக்கவை, வைரமாய் ஒளிர்பவை.

வர்மன்

முல்லை அமுதனின்

## விடியத் துடிக்கும் ராத்திரிகள்

மொத்தம் பதினாறு கவிதைகள் அவற்றுள் ''கல்லறை களுக்கு வீரவணக்கம்'' என்ற கவிதை ஒரு வாசகனுடைய பார்வையில் நிச்சயம் சிறப்பு பெறும். விடுதலைப் போராளி கள் செத்து சருகாய் மடிந்ததையும், அவர்களை அர்ச்சிக்கும் போது பூக்களை வீசவேண்டாம். அவர்களின் தூக்கம் கலைந்துவிடும்.. அவர்களுக்காக விடுதலைக்கீதங்கள் மட்டும் இசையுங்கள் என்று முல்லை அமுதன் கூறும்போது பாரதியின் உணர்ச்சிக் கவிதைகள் கூட தோற்று விட்டன.

கவிதைகள் அனைத்தும் ஒரே பார்வையில் அமைந்திருக் கின்றன. தமிழக கவிதைகளைச் சாடி நிற்கின்றன. கவிதை களைப் படிக்கும் போது கவிஞர் ''சால்'' அவர்களின் கவிதை நினைவுக்கு வருகிறது.

இடைவெளிகளை நிரப்புவதற்காக இடம் பெறுகின்ற கவிதைகள் உண்மையிலே சிறப்பாகவும், காத்திரமாகவும், இருக்கின்றன. ஒரு எழுத்தாளனுடைய சிருஷ்டியின் வெற்றி தோல்வியை நிர்ணயிப்பது விமர்சகனுமல்ல, வாசகனுமல்ல; ''காலம்'' தான். முல்லை அமுதனின் கவிதைகள் ''சீஸன்'' கவிதைகளாக இருந்தாலும் நிச்சயம் நீண்ட காலம் வாழக் கூடியவை என்பது உறுதி.

'சிங்கள நண்பர்கள்' என்ற கவிதை மூலம் முல்லை அமுதன் வாசகர்களை ஏமாற்றி விடுகிறார்.

குறிப்பாகச் சொன்னால் 'முத்தான' அன்புக் கவிஞர் களுக்குக் கூட 'விடியத்துடிக்கும் ராத்திரிகள்' பாடப்புத்தக மாக அமையும்.

**கோகிலம் யூன்—ஆகஸ்ட் இதழ்**
**விமர்சனம்** — **தமிழ்ப்ரியன்**
(ஹசன்)

## புதுயுகம் பிறக்கும் !

எங்கள் —
உழைப்புச் செடிகள்
பூப்பது
காசமலர்களல்ல;
வெறும் கலயம்
சுமந்த —
துன்பக் கனவுகளே... !
உருண்டோடும் வாழ்வில்
இருண்டபாதைகளே —
நெடும்தூரம் !
புயல் சுமக்கும் எங்கள்
மனஇருட்காடுகள்
எரிந்து உருகுவது —
எந்தத் —
தேவனின் வருகைக்காக ?
இவைகள் —
வெந்துதணிந்த காடுகளல்ல...
புழுதிப்புயலை விதைத்துவிட்டு
இங்கே —
வீழ்ந்துபோன
மனித ஆத்மாக்களுக்காக
உருகும்
மெழுகுவர்த்திகள் !
இங்கே —
முடியப் போவது — ஒரு

யுத்தகாண்டம் மட்டும்தான்;

........................

பிறக்கப் போவதோ —
ஏழைமனமாறும் சாம்ராஜ்யம் !

□ தாரகை, ஜூன் 83

## நாளைவரும் அக்குயில்

முன்னம் ஒருநாள்
ஏவாள்
கதை சொன்ன அக்
குயில் —
பின்னே — மேரி
கதை சொல்லவும்
சீதை — அகலிகை
மாதவி — கண்ணகி
கதைகளை சொல்லியபின் —
இப்போ —
வாழ்வின்றி
பாழாகிப் போன புனிதாக்கள்
கதை இடறிச் சென்றது.
மீண்டும்
அக்குயில்
நாளைவரும்...
எந்தப் புனிதாக்கள்
கதை சொல்லுமோ...
மனம் காத்திருக்கிறது.

□ 18-2-79

## உழைப்பு

வறுமைநதியின்
ஈரலிப்பில் —
வியர்வைச் செடியில்
வாழ்வுப் பூக்கள்
மலரும் —
அங்கே
உழைப்பு உரமாகும்.

□ 19-2-80

## பெண்கள்

அர்ச்சனை மலர்களாய்
மலர்ந்து
காத்திருக்கிறோம்
அர்ச்சகரைத்தான் காணோம்.

இன்பஸ்வரங்களே
இனிதாக
மீட்டித்தருகின்ற
காதல் வீணைகள்;
கல்யாண சுகந்தங்களை
கனிவாக —
அள்ளித் தெளிக்கின்ற
பன்னீர்மலர்கள்

நாங்கள்
கோகுலத்துப் பறவைகள்தான்
எம்மைக் கொஞ்ச
கோகுலத்துக் கண்ணன்கள்
தயாராய் இல்லை.
ஏனெனில்
நாங்கள் ஏழைப்பட்சிகள் !

□ 22-2-80

*சிங்கள நண்பர்களுக்கு !*

ஒவ்வொரு ஆண்டும்
நாங்கள் —
கைகுலுக்கிக் கொண்டோம்
''ஆய்போவன்''
''வணக்கம்'' இவைகளுடன்.
தேர்தல்மட்டும்வரும் விடியல்தராது.
நமது —
தலைகளை அகதிகள் முடிதரிக்கும்.
முகாமில்... கோயில்களில்...
கடலில்...
மீண்டும் கைகுலுக்கல் —
''ஆய்போவன்''...''வணக்கம்''
ஆண்டுகள் அவர்க்கும் பாடம் !
திகதிகள் தொலைந்திருக்கலாம் ! !
எனினும் —
இனிய தோழர்களே
நீங்களே —
எங்களின் அத்யாயங்களை
புரட்டினீர்கள் ! புதுப்பித்தீர்கள் ! !
இன்று —
சட்டத்தில் - பயங்கரவாதிகள்.

தொடர்கின்ற வருஷங்களில்
கைகுலுக்கல் வராது...நிச்சயமே
ஏனெனில் —

எங்களின் மனது மந்திரம் ஒலிக்கும்
தமிழ்ஈழம் என்பதாக !
கரங்கள் —
துப்பாக்கிகளை தயார்ப்படுத்தும் !

□ 26-1-89

## 1983 செப்ரம்பர் 7

வர்க்கப் போராட்டத்தின்
கறுப்பு நாட்கள் இவைகள் !
ஏமாந்தோருக்கு சிவப்பாய்
எழுதிய —
அடிமைச் சாஸனம் !
நமக்குப் புரிகிறது.
முஷ்டிகளை ஓங்கத் தெரியாத
அப்பாவிகள்
எதற்கெடுத்தாலும் சுட்டுவிரல்காட்டி
அனுமதி பெறும் நாளின் ஆரம்பம்
இதுமுடிவல்ல... ஆரம்பம்
எனினும் —
தொடர்ந்துவரும் நாட்களையாவது
சிவப்பு நாட்களென
பிரகடனப்படுத்துங்கள் !
யாவர்க்கும் புரியும்.

□ 6-1-84

## பொதுமைப் பூக்கள்

காலை அரும்பி
மாலை கருகும்
மலர்களல்ல... !
அதிர்ச்சி வைத்தியத்தால்
சிதைந்து விடும்
கண்ணாடி வார்ப்புகளுமல்ல... !
பீரங்கி விந்துக்களை
கருப்பைகள்
இங்கே
சுமக்கும் அதுவே
புரட்சி விந்துக்களை
பிரசவிக்கும்.
கோமகன் நாமம் உச்சரிக்கும்
கோபியர்களை விட
விடுதலைக் கவிதைகளை
உச்சரிக்கும் நாங்கள்
மேலானவர்கள்... புரட்சியை
வெல்லத் துடிப்பவர்கள்.
வானமே கூரையாக
வையகமே எல்லையாக
அழகு நிலாவை
சாட்சிவைத்து
அரங்கேறுகின்ற எங்கள்
கல்யாண வீச்சுக்களால்
பொதுமைகளையே எங்கள்
கருப்பைகள் மலரவைக்கும்... !

□ 4-1-82

## வேடிக்கை மனிதர்கள்

ஒருநாள் பொழுதில் —
பிணமாக வீழ்ந்த அவனை
குழுமியது கூட்டம்...
கசமுச... வார்த்தை முணுமுணுப்புகள்.
நேரம் சென்றது.
போலிஸ் வந்தது
பிணம் தனியே கிடந்தது.
கூட்டம் எங்கே போயிற்று ?
பார்வையாளர்கள்
அவர்கள்
பங்காளர்களல்ல... !

□ 16-3-89

## சோகங்களும் காயங்களும்

குதூகலம் பூத்துக் குலுங்கும் நேரம்
சந்தோஷம்
கரையை உடைக்கும்.
பிற்பாடு —
சோகம் வந்து அதைக் காயப்படுத்தும்.
அப்போது —
இதயம் திறந்து கொள்ளும்
வடுக்கள் அங்கே வரவு வைக்கப் பெறும்
சோகம் கூடு கட்டி
வாழப் பழகிக் கொள்ளும்
அயல் வீட்டு நட்புப்பூக்கள் கூட
கைகுலுக்க மறுத்து
வேடிக்கை பார்க்கும்.
இதுவே —
நாளும் என்னில் காலம் நடத்திப்பார்க்கும்
தாளலய நாடகம் !

□ 2-3-89

## *மாற்றமில்லா...!*

''வெள்ளையனே வெளியேறு !''
கோஷங்கள் தொடர்ந்தன
இன்று —
சிறிது மாற்றம்தான்.
எனினும்
எல்லாம் நமக்கு ஒன்றுதான் !
''தமிழனே வெளியேறு''

□ 24-6-84

## *காத்திருக்கை*

அவனது
தோட்டத்தில்
வண்ணக் கனவுகளை
சிருஷ்டிக்கும்
மலர்கள் நிறைந்திருக்கும்.
மல்லிகை...ரோஜா...முல்லை.
இத்யாதி...இத்யாதி
இருந்தும் —
அவனது மனமோ
ஒரு
சூரியகாந்திக்காய் காத்திருக்கும் !

□ 20-3-89

## சுதந்திரம்

எங்கள் வீட்டு
ஒட்டறைகளைத் துடைக்க
எத்தனை கரங்கள்
முனையப் போகின்றன ?
சோம்பேறித் தத்துவங்கள்
மலிந்த
எங்கள் வீட்டில்
பாவம் துடைப்பம்
இன்னும் மூலையில்
தவம் கிடக்கின்றது

□ 10-4-84

*ராஜ பறவைகளுக்கு !*

**(விடுதலைக்காக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்ற இளைய தமிழனுக்கு)**

இருட்டு மனிதர்களை
சூரியன்முன்னே
விசாரணை நடாத்துவதற்காய்
நோன்பு நோற்கின்ற
விரதிகளே
உங்களிடம் மலர்களையே
கொண்டுவந்த எமக்கு
''நாங்கள் நேசிப்பது முட்களையே''
என்கிறீர்கள்.
ஓ... புரிகிறது ராஜபறவைகளே !
முட்களாய் விதைக்கிறோம்
சுதந்திரப் பூக்களாய் மலரட்டுமென
எம்மை
ஆசீர்வாதம் செய்யுங்கள் !

அன்பே...

எத்தனை எத்தனை
தொலைதூரப் பயணத்தின்
களைப்பு — பிறகே
உன் இதய சாம்ராஜ்யக் கைப்பற்றல்
நடந்து முடிந்தது.
கடவுளைக்காண —
தவமிருப்பது ஞானிகளின் வேலை.
இங்கே —
என்தவமிருப்பு... ?
நான் கூட ஞானி...என்னுள் ஒரு பெருமிதம்
யாவர்க்கும் நடந்த கதவடைப்பு... எனக்குமட்டும்
என்னுடன் நீ
ஜோதியில் கலந்திட
நாட்கள் இத்தனையா என்ன ?
எனியாவது —
தவத்தைக் கலைத்துவிட்டு
நிஜத்தைத் தரிசிப்போம் !

□ 12-3-89

## விழியால் ஒரு சுயம்வரம்

உன்னை வென்றுவிடத்தானே
இந்த
சுயம்வரம் !
விழிவில்லால்
என்னை வீழ்த்திவிட்ட பிறகு...
எந்த வில்லும் எனிமுறியாது
அப்பனிடம் சொல்லிவிடு
நிறுத்தட்டும்...
இனியொரு
சுயம்வரம் தேவையில்லை
என்வரமே நீயாகும்போது
ஏன் இந்தச் சுயம்வரம் !
இன்று முதல் —
கல்யாண கனவுகளை தயார் செய்வோம்.

□ 12-3-81

*சிவப்பு விடியலுக்கு*

இதுதான்
சரித்திரம் சொல்லும் இலங்காபுரி.
அனுமன் தொடக்கிவைத்தது
இன்று—
நின்று எரிகிறது.
அது பெரு நெருப்பு
கண்ணகி எரித்து மதுரை சாம்பல்
இங்கோ...
இராணுவம் பெரு நெருப்பாய் சிரிக்க
நமது
நிலமும் பற்றி எரிகிறது.
ஒன்றாய் சிவனும் சில்வாவும்
கைகள் குலுக்கிக் கொண்டது
மறந்து போயிற்று! மறந்துதான் போயிற்று!!
இங்கே மானுடம் மட்டும்தான் எரிகிறது!
யுத்த நிறுத்தம்... சமாதானம்... வானொலியில்
ஒலிக்கின்றபோது
ஷெல்... துப்பாக்கி ரவைகள்பட்டு
மானுடம் சரிந்து வீழ்கின்றது.
இது ஒரு தொடர்கதைதான்
முடிவுரை எழுதாத கரங்கள் இங்கில்லை
சிவப்பாய் விடியல் வருமுன்னே
இங்கே—
இரத்தம் நிலத்தில் ஓடுகின்றது.
நமது தலைவர்கள் கதிரைகளில்

படித்ததுவேதம்... மறந்தது மனித தர்மம்.
அதனால்... நாங்களும்... தலைவர்களை... மறந்தோம்.
ஒரு சிவப்பு விடியலுக்கு
இன்று தயாரானோம்!

□ 14-4-89

## ஒரு இதயத்தின் புலம்பல்

கால தேவனின் ஊர்வலத்தில்
கவிதைப்புலவனின் நாட்டியங்கள்
நாட்டியத்தின் ராகங்கள்
என்றும் தவறாத சோகங்கள்
ஹே! தரிசனம் கொடுக்கும் தேவர்களே!
சோகங்களை அழைத்துப் போகும்
ராகவரிகளை நெஞ்சில் பதித்துவிடு!
இங்கே கேட்கும் ஒலிகள்
என்னும்
பொங்கு பூம்புனல் என்றால்
நெஞ்சே எனது
சோகங்களை அழித்து இன்னிசை ராகமிசையேன்!
ஓ... என் உயிர் சுமந்த உடலே...
உனக்காய் வாழ எனக்கு ஒரு உயிர்தான்...
புகையாத நெருப்பில் உன்
நெஞ்சின் அலை கொதிக்கும்
அரிசி...புளி...உப்பு...எனது
கால்கள் நடக்க
இங்கே... அம்மா நானோ
பாலைவனத்தின் பொதி சுமக்கவந்த
ஒட்டகமல்ல... எனினும்
பாசச் சுமைதாங்கி வந்தேனிங்கு
என் இதய வரிகளை ஏடுதாங்கி
வராததால்—
தம்பி நீ... கோபப்படாதே...
வாழ்வது ஒருமுறை... உமக்காய்

நான் வாழ்வேன் என்பது
சபதமல்ல... வேதம்
கடன் தந்தவர் வாசலிலா?
என் இதயத்திலல்லவா...!
இந்த அப்பாவி மனிதர்களின் புலம்பல்
நிச்சயம்...
எந்த அலைவரிசையிலும் ஒலிக்காது!
ஒருநாளில் எனது காலடியில்
தலைவணங்கும் காலம் நோக்கி
இப்போது...
என் தலைசாய்ந்துள்ளது பிணமாக!
புலம்பாதீர்! புலம்பாதீர்!!
உறவாய்... உதிரமாய்... மண்ணில்
புதையப் போகும் பாசச் சுமைதாங்கிகளுக்கு
ஹே... நண்பர்களே...
பால் பழங்கள் வேண்டாம்
உதிரும் உங்கள் கண்ணீர்களை
சேமித்துப் பழகி...
பின்னால் வருகின்ற வாலிபர்களுக்கு
பாதை சமைத்துக் கொடுங்கள்!

□ 21-8-84

*மனிதனாக...மனிதனாக...*

விதி ஏன் இப்படி
சிரித்தது
மதி இழந்த மனிதன் நானா?
பாதையில் கிடப்பது மலர்களா?
தலையில் சூடியிருப்பது கிரிடங்களா?
இல்லை என்றே மனது சொல்லும்
முட்கிரிடங்களும் கொடிய
தலைகளிலும்... பாதங்களிலும்...
இறைவனை நினைப்பது
சூரிய நமஸ்காரமும் செய்வது போலா?
புரியாத உலகில்
தனி வழி நோக்கி நான்...
மனிதனாக... மனிதனாக...

□ 8-7-84

## நிஜங்களின் தரிசனம்

துப்பாக்கி ஏந்தும் கரங்களில்
விலங்குகள்! ஒருநாள் அவை
உடைந்து போகலாம்
மண்ணின் கீதங்கள் மட்டும்
கிராமத்து இதயங்களில்
என்றும்
ஒலித்துக் கொண்டிருக்கும்
குருதி படிந்த மண்ணில்
சோகங்களைச் சுமந்தபடி...
மனித உடல்கள்
ஓ... அவர்களின் வருகை
நமக்குப் பயம் தருகின்றது...
உடல்களைத் துளைக்கும் ரவைகள்!
டிரக்குகளில் மிதிபடும் தலைகள்!!
சப்பாத்துக்களில் மோதுபடும் உடல்கள்!!!
ஓ... புத்தனே
உனது போதனைகள் ஏன் இங்கு தோற்றுப் போனது?
இறைவா...! உன் உடலில்
இதோ அர்ச்சிக்கிறோம்
குருதிப்பூக்களை!
ஓடும் குருதி ஆற்றில்
ஓலமிடும் குரல்கள்
இப்படி...
இப்போது—
துப்பாக்கி மட்டும் தான்
தேவைப்படுகின்றது!!

□ 28-11-1984

## அனுபவம் ஒன்று

கடலின் கரை நாடி
வருகின்ற நதி அலைபோல்
தேவி—
இந்த மனிதன் வருகின்றான்
தெருவினில் இறங்குங்கள்
உனக்கு மரண பயம் என்றால்...
இந்த மனிதனின் மரணம்
தவிர்க்க முடியாததுதான்!
மண்ணில் புதையும் தலைகளைத் தாங்கி
குருதி ஆறுவருகிதடி!
ஒன்றில் தேவி விலகிக் கொள்!
இல்லையெனில்... உனது இறப்பு இங்கேயாகாலம்
விதி எழுதும் சரித்திரத்தின் அத்தியாயம் நாங்கள் தான்
எனினும்... என்றோ சாவது நிச்சயம்
தேவி வந்து விடு!
துப்பாக்கிகளின் தூறல் நம்மீது படப் போகிறது...
கங்கை இன்னும் வற்றி விடாத
கிராமத்து இதயமே...!
வீழ்வது உடல்கள் மட்டும் தான்
இதயங்களல்ல...

□ 28-7-1984

## *விண்ணப்பம்*

சிரித்தபடி... சிலிர்த்தபடி
எழுந்து மடிந்து போகின்ற
இந்த
இலைகளின் வேர்கள் கூட
ஏதோ சோகம் சொல்லித்தான் போகின்றது.
ஓ...
பட்டாசுக்காரர்களின் வெடிப்புலம்பல்
சிதறிய சிறுவர்களைப்போல...
பட்டாளத்தானின் வெடிக்குதறலில்
எங்கள்
உயிர் கூட அதிர்ந்துதான் போகிறது.
எத்தனை உயிர்கள்...? எத்தனை உடல்கள்??
தேவ பிதாவே
'பசிக்கின்ற வயிற்றுக்கு உணவுதா'
என்கின்ற எனது
விண்ணப்பம் போய்
இங்கே
'துடிக்கின்ற கரங்களுக்குத் துப்பாக்கிதா'
இதுவே எனது இறுதி விண்ணப்பம்.

□ 30-5-86

## ஒரு காதலிக்கு

காற்று வாங்கப் போன கானல் பறவைகளே
உங்கள் கவிதைகளில் எத்தனை சோகங்கள்!
கனவுகளை விதைக்கும் கவிதைகளை நேசிக்க
யாரும் கடல் கரை நாடி வரவில்லையா?
கடலில் ஒளிந்துகொண்ட சூரியனைத்தேடி
சந்திரன் எழுந்து வருகின்ற காட்சியைக் காண
என் காதலி கூடவா வரவில்லை...
கடல் அலைகள் எழுந்து ஆர்ப்பரித்திருக்குமே
எங்களின் காதல் கவிதைகள் ஒலிக்காததையிட்டு.
நீண்ட நெருப்பினை
விண் கூவி அழுதிருக்குமே...
காதல் பறவைகளின் கீதம் இன்றில்லை என்பதால்
காய்த்துச் சிரிக்கும் இளநீர் குலைகள்
என்ன பாடு பட்டிருக்கும் உன்னைப்போல...
காதல் இனிமையானது! இளமையானது !!
எனக்கு மட்டும் கவிதையானது...!!!
சிரித்த செம்மலர் உதிர்ந்து அருந்தவன்
தோட்டத்திலா வீழ்ந்திருக்கவேண்டும்?
ராகங்களை ரசிக்கும் தேவனே
இந்த இளையவனின்
கீதங்களைக் கேட்ட பின்புமா
காதலின் கனதிகள் புரியவில்லை உனக்கு.
ஓ...
அனார்கலி-சலீம் போல
அம்பிகாபதி-அமராவதி போல
இந்த

ரோமியோ-ஜூலியட்டின் கதையை
உலகம் புரிந்து கொள்ளட்டும்
சோகங்களையே ஒலி பெருக்கும்
இந்த வானொலி
காதல் கவிதைகளை நிச்சயம்
நேயர் விருப்பமாக்கிக் கொள்ளும்.

□ 24-10-84

## ஒரு இதயத்தின் குழல்!

இரவில் முகம் தேடும் இரவல் பறவை இது
வானம் அளாவும் எந்தன்
இதயப்பறவை தாளப்பதியும் போது
நிழலாய் தொடர்வது யார்?
இளமை வனங்களில் ஏன்
இந்த
சூரியகாந்தி மலர்ந்தது?
நான் சூடிக் கொள்ளவா?
இல்லை... இல்லை மனது அடித்துச் சொல்லும்.
தேகம் விரும்புவது மனிதன் குற்றமில்லை
காலப் பயணத்தின் ஒரு வழிப்பாதை
இளமை என்பேன்
முதலுக்கு முதலாகி... முடிவுக்குப் பொருளாகி
இதயம் தொட்டவர் என்று சொல்லியது
நீ மட்டுமா?
அழகைக் படைத்தது ஆண்டவன் எனில்
எங்களில்
அறிவைப் பறித்தது யார் சொல்?
விதியைத் துணைக்கழைக்கும்
சமூக வட்டத்துக்குள் வாழும் காவலர்கள்
எங்களின் பாதையை
தகர்த்தெறிய கோடாரியுடன் இதோ...
வாழ்வது ஒரு முறை பிரியமே
பிறர்க்காய் வாழ்வோம். காவிய வசனமல்ல...
ஓர் இதயத்தின் குரல்
''பழகி வந்த புதிய சுகம்

பாதியிலே மறைந்தாலும்"
படித்தது இங்கே மணத்தது
என்னுள் உறைந்தது.
என் பாதைகள் விரிந்துள்ளன
தூக்கும் கால்கள் தொடர...
வழித் துணையே நீ
வழி விட்டுக் கொள்...
காலத்தரிசனம் தத்துவம் தந்தது...
உனது உறவு உலகை நினைத்தது
பாசமலர்... தொடர்வோம் நாளை
எனக்காய் ஒரு பூ மலர்ந்துள்ள வேளையில்
உனக்காக ஒரு மாலையும் எங்கோ காத்திருக்கும்
இங்கே சரிந்தது தாஜமகால் மட்டும்தான்
ஆனால்
எரிந்து கொண்டிருப்பது மட்டும்
சந்தன மரம் என்று காற்றாய் சொல்லில் செல்வேன்!

□ 02.10.84

## ஒரு கேள்வி

மௌனத் தவமியற்றும்
இந்த
ஞானியின் தவத்தைக் கலைத்தது யார் ?
ஊர் கோலம் போகின்ற
நினைவுகளை
தடுத்து நிறுத்தியது யார் ?

வெள்ளையன் தந்த போதனைகளே
நமக்கு
சோதனைகளாகிப் போன கதை இங்குண்டு
பாரதி தந்த
வேதபாடங்கள் வழிகாட்டின நமக்கு
புரிகிறது... புரிகிறது...
பாரதி நீ வழி காட்டினதான்...

எனினும்...
பாதைகளின் கற்களைத் தகர்த்தது
நாங்கள் தான்...
சூரியன் மறையாத நாட்டின்
பிரஜையே...
இந்த எரிமலை சுமந்த
இதயத்தோனிடம் நீ கேட்பது
வரங்களா... ? மன்னிப்பா... ?
நீ எனது
கால்களைப் பிடிப்பது எதற்காக

எனது இரும்புக் கால்களை
இழுத்து வீழ்த்துவதற்காகவே !
இதயத்துள் ஒன்று
எரிந்து வீழ்ந்தது.

□ 30.9.84

## நாளைய விடியலில்...!

நடந்து செல்லும் போது மட்டும்
பாதை மலர்கள் குத்துகின்றன !
இறங்கி வருகின்ற தேவதைகள்
வரம் தர மறுக்கின்றன !!
வாழ்க்கைப் பரிட்சைக்கு
புள்ளிகள் இடுங்கள் என்றால்
பூஜ்ஜியத்தைப் போட்டு விட்டு
கண் சிமிட்டிச் சிரிக்கின்றன !!!
ஏன் எனக்கேட்க நான் முடியாது ?
முடியும் என்று தலைநிமிரும்போது
முன்னும் பின்னும் படுகுழிகள் தடுக்கும்
கண்மூடித் தவமிருக்கும்
பரமதேவனே...
ஒன்றில் எம்மை இரட்சியும்
இல்லையெனில் —
இரத்தப்பூக்கள் பூப்பதை தடுத்துவிடாதே
புரட்சி - இரத்தத்தில் பூக்கும்தான்
இங்கு மட்டும் —
கண்ணீரிலல்லவா பூக்கப் போகின்றது !
சுதந்திரத்தையல்லவா சொல்லுகின்றேன்.
புரிந்து கொள்ளுங்கள் தோழர்களே !
பனிக்கட்டி பூட்டிய கால்களுடன்
பதவிமோகிகளின் ஊர்வலம்
முடியப்போவது நமது ஆரம்பத்திலேதான் !!
எங்கள் —
இதயம் வடிப்பது கண்ணீரா என்ன ?

இல்லை என்று
இரத்தம் பூத்துச் சிரிக்கும்! புரட்சி அதில் வெடிக்கும்!!
புத்திஜீவிகளுக்கு துப்பாக்கிகள் தேவையில்லைதான்
இந்தப்
புலவனுக்கு புல்லும் ஆயுதம்தான்...
நாளைய விடியலில்
புதிய பூபாளம் எங்கள் விரல்களில் மீட்டும்வரை
அந்த இரவு
துப்பாக்கிகளை வருடிக் கொடுக்கட்டும்.

□ 24.10.1984

## இங்கேயும் விடிந்தது இரவொன்று

விடுதலைக்கீதங்கள் இசைக்கும்
இந்தப்
போராளிகளின் குரல்களில்
எத்தனை சந்தோசங்கள் சரிந்துவீழ்ந்தன !
சோகங்களின் வடுக்கள்
பூத்துச்சிரித்ததாலா பொங்கி எழுந்ததாலா
இத்தனை கால்கள்
அணிவகுத்து நிற்கின்றன !
ரத்தப்பூக்கள் தினசரி
சிதறி வீழ்ந்ததால்
எழுந்துவரும் மண்ணின் மைந்தர்கள்
ஓரணியாய் அது பேரணியாய்...
இவர்களின்
காலடிச்சுவடுகளில் மோப்பமிடும் நாய்கள் எங்கே ?
தூரம் வெகு தூரம் என்றிருந்த
விடுதலைக் கோபுரம்
இங்கே இங்கே என்றான பின்
வழிமறிப்பது யார் ?
செம்மை விரிந்து கிடக்கும்
எங்கள் மண்ணில்
எத்தனை தலைகள் ... குருதிப்புனல் ஓடும்
அது கங்கையா ? கண்ணீர் ஆறா ?
கற்பே நெருப்பாய் சுடுகின்ற மண்ணில்
கற்பே அறுந்த சோகநாயகிகள் இங்கே

தாயாய்... தங்கையாய்... அக்காளாய்...
என் காதலி கூட இங்கேதான்
எங்களின்...
அறைகூவல் சர்வாதிகாரிக்கு
நிச்சயமாய்—
எழுந்து வரும் இந்த எரிநட்சத்திரம்
கொண்டு வரும்
தமிழ் ஈழ மண்ணைத்தான்
தமிழ் பாடும் மண்ணின் கரங்கள்
ஏந்தி நிற்பது மட்டும்
புலிகளின் கொடியாய் நின்று
உலகில் பறைசாற்றும்
"விடிந்தது இரவென்று"

□ 5-10-84

## நிலவும் நானும் சோகங்களும்

வரும் போரும் நினைவுகளை அறுத்து
உதிரக் கொடியில்
பாசச் செடி இங்கே முளைக்கும்!
வானுயரப் பறக்கும் விமானங்களை விட
எங்களின்—
ஆசைப்பறவைகள் வேகம் மிக்கவை!

தேசம் விட்டு—
தேசியம் வளர்க்க முடியாது
நேசம் விட்டு—
பிறரிடம் எதிர்பார்ப்பது
நேசிப்பது என்பதாகாது.
புவி சுமக்கும் மானிடங்களின் நடுவே
ஏன் இந்தப்
புல்லுருவிகளின் ஊடுருவல்
தேய் நிலா நம்முடன் முடிந்து விடட்டும்!

சோகம் சுமக்கும் இதயங்களே
போதும் போதும் எங்களின் இதயம்
—இனி மேல் தாங்காது.

நாளும் பொழுதும் உலவும்
நட்சத்திரங்களுக்கு
சாபமிட்டது எந்த முனிவன்?
இங்கே—
மீண்டும் ஒரு விசுவாமித்திர தரிசனமா?

துகிலுரியப் பட்ட இந்த பாவாத்மாக்களின் நடுவே
எனது நிர்வாணம் கூட தொடர்கிறது!

இங்கே—
எரி பொருள் வினை பொருளாமே !
ஏன்—
எரித்தி வில்லை அசுரத்தனங்களை !
ஓ... எரிமலை ஒன்றுக்காக
காலம் கூட காத்திருக்கின்றதா என்ன ?

தெய்வமே—
உனது மௌனத் தவம் கலைந்து
எழுந்து வருக
எந்தப் பாற்கடலையாவது கடைந்து
இந்த—
விஷங்களை அழித்து விடுங்களேன்

நீ வரும் வரை
எங்களின் மேலே
பருந்துகள்.
மறைத்தபடி ... மறைத்தபடி...

□

## நெருப்பில் எரியும் மங்கை

நிலவுச் சிரிப்பில் யன்னல் கவிதைகளை
என் மீது
தூவுகின்ற நேசமகளே
தினம் நீ வீசுகின்ற பார்வைக் காற்றில்
குளிர்காய்ந்தவர்கள் எத்தனை பேர்?
நிலவை குறை கூறப் போகிறாயா என்ன?
நெருப்பில் நின்று
குளிர் காற்றாய் வீசியது போதும்!
நீ மெழுகுவர்த்தி என்பதை
நான் ஒத்துக் கொள்கிறேன்
பலருக்கு நீ ஒளி கொடுத்ததினால்!
ஆனால்,
நீ உருகிப் போவது யாருக்குப் புரியும்?
சிலருக்கு—
உன்னை எரியவிட்டுப் பார்ப்பதில் ஆசை அதிகம்தான்
என்றாலும்
உன்னுடன் என்னையுமா எரித்திடல் வேண்டும்?
உன் கண்களில்
எத்தனை கங்கைகள் இப்படி ஊற்றெடுத்தன?
மற்றவர் குளிப்பதற்கு
உன் கண்ணீரல்லவா தேவைப்படுகின்றது.
இப்படி நீ எரிவதற்கு
எந்த முனிவன் சாபமிட்டான்?
இன்னுமா
எங்களின்
நெருப்புப் பார்வைகளுக்கு

சக்தி சற்று அதிகம்தான்...
கருத்தரிக்கா விட்டாலும்
கருணை காத்திருக்கும்
உங்களின் முக்காடுகளை விலக்கி
தாபம் பொங்கும் பார்வைகளை
நெருப்பாக்குங்கள்
சட்டங்களுடன் மனிதர்களும்
எரிந்து விழட்டுமே

□

## நிகழ்வுகளும் தாக்கங்களும்

நாற்காலியில் சாதுவான தூக்கம்
போடநான் இருந்த வேளை—
தெருவில் ஒரு சோகம்
என்னைத் தட்டி எழுப்பும்.
என்ன அதுவென எட்டிப்பார்த்தால்
டிரக்கின் அடியில் தலைகள்
பாரிய உறுமலுடன்—
மனித பிணங்களாகும் துப்பாக்கி ரவைகள் !!
ஓ... உகண்டா ராஜ்யம் நடக்கிறா என்ன ?
வேதனை அழுகை மனதில் வடு அமைத்துக் கொள்ளும்
இன்னுமா ?
பிணந்தின்னிகளின் ஊர்வலத்தினிடையே
எத்தனை கல்யாணிகள் கற்பழிக்கப்பட்டு...
ஓ...
பாஞ்சாலி எப்போது தனது சபதம் தொடங்கிக்
கொள்ளப் போகின்றாள் ?
''நான் மகான் அல்ல' என்கிற தலைவனின்
போதனை இப்போது புரிகிறது நமக்கு !
ஹிட்டலரின் டயறிகளை கொளுத்திவிட்டு
இங்கே
புதியதோர் அத்தியாயத்தைப் புரட்டிக் கொள்ளுங்கள்
வாசல் கதவோரம்
வண்டி நின்றால் தங்கை ஓடி வருவாள்
அம்மா அடுப்பாய் எரிவாள்...
மகன்களுக்கு மட்டுமா மகள்களுக்கும் தான்...
அவனின் சோகம்... தங்கையின் சிரிப்பில் தடக்கி விழும்

பாழும் கவிதை மனது இப்படி நினைக்கும்
சில நேரத்து வேடிக்கை மனிதர்களா இவர்கள்...?
நாங்கள் என்ன வாடிக்கை மனிதர்களா
தரும் போது வாங்கிக் கொள்வதற்கு?
எப்போது...
இன்னொரு பாலஸ்தீனத்தை உருவாக்கப் போகின்றோம்.

□

## மணலில் புதையும் கனவுகள்

முகம் தேடும் பார்வைகளின் நடுவே
பிரளயமாய்ப் போன
என் சோகத்தின் வடுக்கள்
பாலைவன மணலில் புதையும்.
பருவம் நகர்த்தும் இந்த
மானிட உடலை
சாந்தி வந்து தழுவும் வரை
என் மனமும் காத்திருக்கும்.
சோலைக் குயில்கள் பாடாத
மாலை மயில்கள் ஆடாத
மயக்கங்கள் பூ விரிக்கும்
பாதைகள் நடுவே
முட்கள் சூடிய இந்த பாவாத்மாவின்
ஊர்வலம் நித்தம் நடந்திருக்கும்.
ஓ... பரலோகத்திலிருக்கும் எங்கள் பிதாவே
நீ நான் எங்கும் என்றும்
சமத்துவமாய் வாழ
எனக்கான சொர்க்கத்தின் வாசலை
இன்றே
திறந்து விடு ! புதிய உலகின்
கோபுரங்கள்
எனக்காய் காத்திருக்கின்றன.

□

*முக்காடுடன் திரியும் பருவ எழில் ஓவியங்களுக்கு இது சமர்ப்பணம்*

பூத்த மலர்களே !
இந்த
மண்ணில் நீங்கள்
பாவப்பட்ட ஜென்மங்களா என்ன ?
சேலைகளின் சரிவில்
சரித்திரங்களே திரும்புகையில்
உங்கள் எழில் முகங்களுக்கு
திரைகள் எதற்கு ?
என்றோ மாறும் புதிய அலைகளை
இன்றே மாற்றிவிடு...
எழுந்து வருகின்ற வாலிப இதயங்களை
உனக்கெனச் சொரியும்
அர்ச்சனைப் பூக்களாக்கிவிடு.
சட்டம் வாள் கொண்டா அறுக்கும்?
உன்னைச் சுற்றி மனிதர்கள்
உனக்குத் தராத பாதுகாப்பை
முக்காடு மட்டும் தந்துவிட்டதா என்ன ?
என்னுடைய இறுதி
விண்ணப்பம் இதுமட்டும்தான்
பார்வை தரிசனம் தந்துவிடு தேவதையே...
சாகும் வரை
உனது மழலை மொழிகளை கவிதைகளாக்கி
கனவுகளில் வாழ்ந்திடுவேன்

□

*சவுதியில் வாழ்கின்ற பெண் நிலவுகளுக்கு*
*இது சமர்ப்பணம்*

பூத்த முழு நிலவுகளுக்கு
இங்கேன்
முக்காடு ?
சட்டங்கள் இவங்களுக்காய்
மட்டுமேன்
இரும்பாக இருக்கின்றது ?
மனிதர்கள் சட்டங்களிடம்
தோற்று விட்டார்கள் போலும்.
கறுத்த முக்காடுகளினூடே
கண்சிமிட்டும்
நட்சத்திரங்கள் நிச்சயம்
என்னை
தினமும் வசிகரிக்கின்றன
பெண்களின் இதயங்களை
கண்களூடே
ஊடறுக்கும் போது தெரிவது
அங்கே
சட்டவிலங்குகளா ? மனத்தின் தாபமா ?
சொல்லுங்கள் தேவதைகளே
மானிடச் செடிகளில் மூத்த
செர்ரிப் பழங்களே நீங்கள்
இந்த மண்ணிலா
பழுத்திருக்க வேண்டும் ?

☐

## பாவப்பட்ட ஜென்மங்கள்

என்
பிரிய சிநேகிதியே !
வசந்த ராத்திரிகளில்
வாலிப பூக்களை வீசி தினம்
வலம் வரும்—
மன்மத ராஜாவின் ராஜ வணக்கங்கள் !
ஆடு மயில் நீ
அழகுக் கூட்டில் நீ
என் இதயக் கூட்டில் என்றும்
வாழும்
காதல் பறவை நீ
காதலே பொய் என்போருக்கு
நாம் ஒரு
பாலைவனம்தான் எனினும்
நாங்கள் பாலைவனங்கள் அல்ல
பாலைவன வெளிகளில்
வாழ்க்கை வசந்தம் தேடி
புறப்பட்ட புள்ளினங்கள் நாங்கள்
பால் நிலா பொழியும்
கிராமிய எழிலைவிட்டு
தூரத்தே ஒரு பச்சை நீ என
பொற்புதையல் தேடி
புறப்பட்டவர்கள் நாங்கள்!
நாங்கள் பாவப்பட்ட ஜென்மங்கள்
மாத்திரமல்ல...
பாவங்களின் பரிகாரிகளுமே

நாங்கள் தான்
ஏனெனில்—
பாலைவனங்களில் தொலைத்தது
நமது
இளமைக் கனவுகளும் தானே!

□

## மனதும் சோகமும்

பாடல் காற்றில் மிதந்து வரும்
மாலைப் பொழுதில்
என் மனதில் இல்லை உறக்கம் !
சோலைக் குயில்கள் குரலின் சோகம்
மனதில் ஆழப்பதிந்து விட்ட ஒரு ரகஸ்யம் ! !
பிரியமுள்ள தேவனே...
தூரம் வெகுதூரம் என ஆகிவிட்ட
பிரிவு நெருங்காது துக்கம் அதிகம்தான்
கால்கள் தள்ளாட—
மனது வார்த்தைகள் கோர்க்க
கண்கள் அழும் இப்படி...
இந்தக்கடல் கூட என்சோகம் சொல்லி அழுகின்றதோ ?
மணல் ஏன் பாலைவனமாகிப் போய் விரிந்தது ?
ஓ... அழுகையினூடே
உயரே ஊர்க்குருவி தாழ்ந்து பறந்தது

□ 15.03.85

## பாலைவனத்தில் எனது கனவுகளுடன் நான்

வானம் இடித்ததாய்ப் படித்ததுண்டு
பார்த்ததில்லை
கவலைகளைத்தான் சொல்கிறேன்
எங்கே வைத்த நம்பிக்கை கனவுகளை
நட்சத்திரத்திடம் தொலைத்து விட்டேன்...
நட்சத்திரம் மின்னுகின்றது நான் மட்டும்?
தேவர்களிடம் வரம் கேட்கும் போது
துணைக்கு வரும் நீ வரத்தைமட்டும்
உனக்காக்கிக் கொள்வதில் என்ன நியாயம்?
பிறந்தநாளில் நின்று கொண்டு...
எதிர்காலச் சிரிப்பில் நீ...
எரியும் நெருப்பில் நின்று கொண்டு
சூன்யவெளிகளை வெறித்தபடி நான்...!
ஓ...
கனவுகளே தூரப்போய் விடு
எனியாவது
கால்களைத் தூக்கிவைக்க அனுமதித்து விடு!
சோகங்களை விலக்கிவிடச் சொல்லி...
எந்த தலைவனிடம் கேட்பது?
எவரும் அவரவர் துணைகளுடன்...
இங்கு மட்டும் என்ன கொட்டியா கிடக்கிறது
நான் பொறுக்கிக் கொள்வதற்கு...
மீண்டும் ஒட்டகம் என்மீது நடக்கிறது.

□ 23.01.85

*பாசமலர்*

ஒருமுறைதான் பூக்கும்
இந்த
மனிதப் புஷ்பங்களில்
நான் ஒரு
உறவுகளற்ற பாசமலர் !
பாலைவனங்களைத் தாண்டாத
ஒட்டகங்களின் நடுவே
நான் ஒரு—
பாசச் சுமைதாங்கி வந்த ஒட்டகமே
பாவம், எதைத் தாண்டுவேன் ?
அழித்தெழுதா பிரமன்
என் விதியை மட்டும் ஏன்
இப்படி அழித் தெழுதினான் ?
ஒரு நாள்
வாழ்வு அஞ்சலோட்டத்தில்
என்
காலடி மணலில்
புதையும் காலங்கள் கூட
என் வாழ்வின்
சரிதம் எழுதிமறையும்.

□ 24.9.84

## மனைவியும் நானும் காலைகளும்

இரவும் பகலும் இணையும் வேளை
இனிய காலைப் பொழுதாய் விரியும்
பொழுதும் புலரும்
என்—
மனம் கொண்டவள் சிரிப்பாள்!
என் மனதே திறந்து கொடுக்கும்!!
சோலைப் பறவைகளின் சிரிப்பில் இவள்
இந்த மனிதனை வளைப்பாள்
காலை ஆகாரம் அவளாய் முடியும்
சோறு வரும் வரை — இவளே அருகில்...
மானிடம் இங்கேதானே தோற்றுப் போகின்றது
நான் மட்டும்—
மாறுபட்டவனா என்ன?
மஞ்சள் கொடுத்து மனதில் வரித்தேன்
அவளோ...
இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்கிறாள்.
சாகும் வரை
நானோ
மனைவி அருகில் தவம் கிடப்பேன்

□ 28.11.84

## தேவிக்கு

பூ உதிரும் பூ உதிரும்
பெண்ணே...
உன் கனவுப் பூ உதிரும்
வாழும் வழி தேடி...
பாவி நான் எங்கோ...
உன் வழித்துணை நானல்ல
நானும் ஒருத்திக்காய்
வாழ்ந்திருப்பது... நிச்சயம்
உனக்காகவல்ல...
மன்னித்து விடு தேவி
இனிமேலாவது மனதில்
ஆயிரம் மலர்களை மலரவை
கனவுகளையல்ல...

□ 25.8.84

## முகவரி தொலைந்துபோன காதலிக்கு

பிரார்த்தனை தோற்றுப்போன நாளில்
மனிதனாய் நான் வாழ்வது
அன்பே
நிச்சயம் உனக்காகத்தான் !
போகும் வரும் நாட்களில்
நமது காதலும் கல்மேல் எழுத்துத்தான்.
எனது தேவதையிடம் என்றும் கேட்பேன்
''என்காதலி அருகிலிருக்கின்றாள்
இந்த இரவை அழித்து விடாதே"!
காதல் ஒரு பொய்கை
எழுதியவர் வாழ்க
புறநானூறும் தோற்றுப் போகும்
இந்த நாளில்
நண்பர்களே கேளுங்கள்
காதல் போயின் இலக்கியம்கூட பொய்க்கும்
காளிதாசன் வழி, ஒரு கண்ணதாசன்
பின்னாளில்
எனது பெயர் சொல்லும் இப்படி...
'காதலின் கவிதைகள் காதலிக்காய்'
தந்தவன் என்று...!

□ 03.11.1984

## பாசத்தின் புத்திரன்
(முகம்தெரியாத சகோதரிக்கு)

மஞ்சள் நிலா எழுந்துவந்து
காலை இது போய்வா மாலைவரும்
என்று சொல்லும்
மனது ஏனென்று தடுமாறும்
ஓ... ஒளிக்கதிர்களினூடே
தூய வெண்மதியாள்
ஈரெட்டுப்போய் மூவெட்டாய்
சிரித்து சிலிர்த்து நிற்பாள்
பூச்சூடிய வெண்முகிலாள்
பிறந்ததினம் இன்றென
மனதில் கங்கையின் குளிர் கொடுக்க
எங்களின் ராஜபுத்திரி
மூவெட்டுத் தினங்களை முழுதே எரிப்பாள்
கண்களில் கனவு மின்னும்
வாழ்வு சுகம் என்றுரைக்கும்
எப்படி இது சாத்தியமாயிற்று?
ஓ... வெண்பட்டு ரோஜா புதிதாய் சிரித்ததோ ?
வரம் கொடுக்கும் தேவர்களின் நடுவே
இந்த
சுவர்ணமுகியின் நாட்டியங்கள் !
மனது வாழ்க வாழ்க என வாழ்த்துப்பாடும் !
தம்பி உள்ளான் படைக்கு அஞ்சான்...
சொன்னவனை வாழ்த்துங்கள்
எங்களின் இடை வெளி
வானத்துக்கும் வையகத்துக்கும் தான்

மனது மட்டும்—
பாசராகம் வாழ்த்துரைக்க
நன்று எனக் கொண்டாடும்
என்னவள் அக்கா என்பவள்
அதிவிரைவாய்—
கல்யாண ராகமிசைப்பாள்...!
சோகப் பூக்களின் ஆராதனை
நடுவே...
இந்த மனோகரனின்
சந்தோசப் பூக்கள் இதோ...
வாழ்க...வாழ்க...

□ 30.11.1984

## பாதைகளில் மலர்ந்த புஷ்பங்கள்

அழகை ரசித்திருக்கும்
இந்த மனதுள்
செங்கமலம் பூ உதிர்ந்து
காதலாய் மலர்ந்திருக்கும்
காலம் ஏன் இப்படி நடந்தது
இளமை தேடும் காதல் செடி
என்னுள் வளரவில்லை !
ஏன் ?
வழி மறிக்கும் காதல் தேவதைகளே !
இங்கே மலர்ந்திருப்பது
பூக்களா...? பூச்சூடிய புனிதங்களா ?
தேவர்கள் பூஜித்த காதல் தெய்வங்களே
மன்னித்துக் கொள்ளுங்கள் ...?
இந்த—
இளந்தேவனின் பவனி பாசநிலா நோக்கித்தான்
பாதைகள் புனிதமானவைதான் !
ஆமாம் என்...
பாதைகள் புனிதமானவைதான் !
இல்லையெனில்
என் வழி வந்த கங்கைகளின்
கண்ணில் கண்ணீர் என வந்திருக்குமா ?
சொல்லுங்கள் ! சொல்லுங்கள் ! !
முகிலெனப் படிந்த சோகங்கள் சொல்லும்
காதல் பறவைகள்
நானும் நீயுமென உலகத்துடன்
நீயுமேன் சொன்னாய்

வழித்துணை வேறு வேறு எனும் போது
நீயும் நானும் ஒன்றாவதில் ஏது நியாயம்
ஹே... ! நிலவே...!
எனிமேலாவது என் பாதைகள்
உனக்காக மூடியிருக்கட்டும்
மேனி மண்ணில் உதிரும் வரை
ஒரு புனிதம் தேடி ...
காலத்துடன் நானும் காத்திருப்பேன்
தொடரும் பாதைகளில்
மிதிபட நீ வராதவரை நீ கூட
பெண்ணாயிருப்பாய் நானும் —
மண்ணில் நன்றாய் வாழ்ந்திருப்பேன்.

□ 25.8.84

## உனக்காய்

பிரிய நிலவே !
உனக்காய் வாழும் நெஞ்சம்
ஒரு கோடிக் கவிதைகள் பாடும்
கண்கள் தேடும் உள்ளம் பாடும்
நீ வரும் வரை —
உலகம் என்னில் சுடும்
குளிரான பின் நீ வந்து
போர்வையாய்ப் போர்த்தி விடு.
தினமும் வாழும் ராஜபுத்திரனின்
வசந்த காலங்களுக்கு
பூக்களைத் தூவிவிடு.
மின் மினி என ஒளிரும்
பூவுலகில் ...
தேவி நீ வந்து நிலவாய் ஒளிதா ...!
நெருப்பு அனைகள் நம்மை
பிரிக்குமா
கடலில் அலைகள் நம்மை
அழிக்குமா?
சொல் எனது தேவி !
உலகில் வாழ்வது ஒரு முறை
அது...
உனக்காய் வாழ்வேன் சத்தியமே !

□ 18.7.84

## தூரம் தெரிகின்ற விடியல்

வீதிக்கு வருகின்ற வெளிச்சங்கள்
இருளைப் போக்கவா ? இல்லை !
மனதுக்குள் போகின்ற எந்த
கீதையும் தரவில்லை நிம்மதி
நீ நான் நிலா என்கிற
சமதர்மம்
நாளைய ஞாயிறாய் எழுந்து வரும்போது
இன்று
மண்ணில் சிந்திய இளையரத்தமே
நீ நிமிர்ந்தால்
நிலா கூடச் சிரித்து வரவேற்கும்
மண்ணில் எழுந்து வருகின்ற
ஞாயிறுகளின் வரிசையில்
பங்காளிகளின் பங்களிப்பே தேவை
சுவரொட்டி
மனதினை ஒருமைப்படுத்தும்
துப்பாக்கிகள் ஏந்த
கைகள் நீளும் கால்களும் விளையும்
விடிந்தது விடிந்தது
என தூரத்தே முரசம் கேட்கும்.

□ 13.10.84

## விலங்குகள் உடையும்

கனவுகளைக்
கவிதைகள் பொங்கி
விழிகளில் வரிகளைப் பதியும்
கங்கையென நினைக்காதே
காவியம் அது எரியும் ஓவியம்!
இரும்புச் சிறைகள் என ஜன்னல்
ஏக்கங்கள் எரி மூச்சாய் இங்கே
வெந்து தணியும்
எரிவது காடுகளல்ல... கன்னி மலர்கள்
கானப் பறவைகள் நாங்கள்
தூங்கும் போது மட்டும் திண கானங்களாய்
கனவுகள் வரும் போன பின்
சுடுநீராக குளிப்பே நித்யம் தொடரும்
எங்களுக்காய் எழுதிய காவியங்களை
முதலில் கொழுத்தி விட்டு வாருங்கள்
சமூக விலங்குகளை வில்லாய் முறித்துவிட்டு
முதலில்
இராமனாய் வாருங்கள்...
அப்போதுதான்
கனவுகள் கலைந்த நிர்வாணப் பெண்ணின்
சோகங்கள் உமக்குப் புரியும்
இல்லையெனில்
எங்களுள் எரியும் ஏக்கப் பெருமூச்சுகள் ஒரு நாள்
காட்டை அழிப்பதை
தடுக்க உங்களால் முடியாது.

□ 10.7.85

## எனது மண்ணும் சிரிக்கும்!

இந்தப் பொழுதும்
இப்படி விடிந்தது
துப்பாக்கிகளின் தூறல்களுடன்
வீதிகளில் வாகனங்களுக்குப் பதில் மனிதர்கள் ...
வீடுகளுக்குப் பதில் எரியும் நெருப்புகள் ...
ஓ ... எதைத் தணிப்பதற்காக இந்த தீக்கொழுந்துகள்
தீயிட்ட கரங்கள் ஏன் சிரிக்கின்றன !
இங்கே நடப்பது அவர்களின் இராச்சியம்
வானொலி கூறிற்றோ ?
கருகிப் போன உடல்களும்
இரத்த கங்கைகளும் ஒரு நாள்
உயிர் பெறும் போது
கட்டபொம்மனின் வீரத்தின் வரிகள்
இங்கே நிறுத்தப்படும் நிலையாய் ...
இளைய குரல்கள் இப்படி ஒலித்தன
நிமிர்ந்து பார்த்தால்
இராணுவப் பேரணியை அழித்தபடி ...
ஞாயிறு என ஓர் பேரணி
தொலைந்து போன பேரலைகளைத் தேடி ...
செம்மண்ணில் நித்திய அழகை
சிரிப்பாய் ஒருநாள் மாற...
எனது கால்களும்... கைகளும்...

□ 28.11.84

## நிஜங்கள்

நண்பனே ...!
கண்களை மூடி விழிக்கும்போது
நீ
கைது செய்யப்பட்டிருப்பாய்
பாதுகாப்பான உனது வேலியினுள்ளே
அவர்கள் அத்துமீறல் ...
உனக்கான பாதைகளில்
அவர்களின் இரும்பு வாகனங்கள்
ஏன் இப்படி நடந்தது ?
எப்படிச் சாத்தியமாயிற்று ?
வேலிகளாய் நின்றவர்கள்
அவர்களின் விறகாய்ப் போனதால்தான்
மீண்டும் என் கண்களை மூடுவேன்...
எனது
கைகளில் விலங்கு கனக்கும் !
சோகம் குடிக்கும் அம்மாவின்...
ஆஸ்த்துமா விழுங்கும் அப்பாவின்...
வாழாத தங்கைகளின் கண்ணீர்க் கோடுகள்...
அக்கினிக்கு அர்ச்சிக்கப்படும் எனது
— உதிரக்குழந்தைகள் ...
எரிமலையாகும் இதயத்தில்...
ஓ... கொடுமைகள் தாமே சாவதில்லையோ?
இங்கே நடக்கும்
போராளிகளின் போர்ப்பணி நெஞ்சத்தில் எதிரெலிக்கும்
எங்களின் —
கால்கள் அணிவகுக்கும்

ஹே ... நண்பனே புரிந்து கொள்
சரிந்து கொண்டிருக்கும் தமிழர்
சாம்ராஜ்யத்தின் தூண்களாய்ப் போவோம்
நிச்சயம் நிமிரும் — தமிழர்களின் கதைகளும்தான்
அதுவரை சுமப்போம்
கைகளில் விலங்குகளையல்ல ...
துப்பாக்கிகளை

□ 6.10.84

## ஒரு வாழ்த்து
**(தங்கையின் குழந்தைக்காக ஒரு கவிதை)**

தவழும் நிலவு இங்கு
தங்கப் பேழையில் எப்படி வந்தது ?
சந்திரனை நினைத்ததுண்டு ...
அருந்ததியாய் வந்ததிங்கு !
பூத்த புது ரோஜா
இதழ்கள்
மலர்ந்திருப்பது
எந்த மகாராஜாவின் வருகைக்காகவோ ?
சின்னப் பெண்ணான
என் குழந்தை தங்கை எனில்
அவளிடம் இருந்தது குழந்தையா ?
நன்றி சொல்வோம் கடவுளுக்கு.
குழலினிது யாழினிது
தொட்டால் புரிகிறது
வாருங்கள் பாசப் பறவைகளே
எங்கோ
உறங்கும் திருவள்ளுவரிடம்
கேளுங்கள் ...
இந்த அனுபவம் எப்படி வந்ததென?
நேச நிலவுகளே
பாலைவனத்து மணல்களில்
பொன் புதையல் தேடி புதையும்
இந்த —
கானப் பறவையின் குரல்கள்

வாழ்த்துப் பாவாய் ...
வானூடே பறந்து வருகின்றது
வாங்கிக் கொள்ளுங்கள் !
வணங்கிக் கொள்ளுங்கள் ! !

□ 18.10.84

## இரவின் துயில்கலைக்கும் !

இரும்புக் கதவுகளினிடையே
எத்தனை சோகங்கள்
புதைந்து போயின?
துவக்குமுனையில்
இன வேட்டை நடத்துகின்ற
எதேச்சாதிகார கும்பலுக்கு
இந்தச் சோகங்களே
உணவாகிப் போயினவோ?
கோயில் தெருவினில்
மணல் வீடு விளையாடிய
மனதுகள்...
கடல் கரைகளில்
வாழ்வின் எல்லைகளை வரைந்த
உடல்கள்...
ஓ... இங்கே துருப்பிடித்த
இரும்புக்கம்பிகள் தரப்போகின்ற
பாடங்கள் தான் என்ன?
ஈழ மண்ணில் ஓடும்
கங்கைகளைவிட
எங்களின்
இரத்தகங் கைகள் நீளமானவைகளே
கறை படிந்த வரலாறுகளை அழிக்கவே
இங்கிருந்து புறப்பட்ட
உதயங்களே ...
இரவின் துயில் கலைக்கும்
பண்ணிசை நீங்களே ...

□ 18.2.86

## ஒரு நட்புக்காக!
### (கூடிப்பிரிந்த ஒரு நண்பனுக்காக)

மனச் சிறையில் பூட்டிவைத்த
நட்புப் பறவை
தனது சிறகை ஒடித்துக் கொண்டது... !
நட்பு என்பது
ஓடும் அருவியானதில்
உனக்கென்ன அப்படி வியப்பு?
சோகங்களே தாளாத போது
பாவி மனது என்ன செய்து விட முடியும்?
அடிமேல் அடி அடித்து
அம்மியே நகர்ந்த போது
இந்த விருட்சம் விழுந்ததில் தப்பில்லைதான்.
நண்பர்களே...
இனியாவது மனதிடம் சொல்லி வையுங்கள்
ஆபத்து விளைத்தவனாய் எந்த நண்பனும்
இவனைப் போல் ஆக மாட்டான் என்று!
போர் முனையின் வலிமையை விட
சொல்முனையின் விலை சற்று அதிகம்தான்
அது
விதியின் குற்றமெனில் மனம் மன்னிக்கட்டும்
இல்லை யெனில்
தண்டனை—
உனக்கும் கூடத்தான்
உலகில் சீவிப்பது நட்பல்ல.

கொடுரத்தின் நகங்கள் பற்கள் !
புரிந்தது நேற்று
சொல்வது இன்று
எனது ஞானம் இப்படி

□

## மனைவி

காலைக் குளித்தெழுந்து
குங்குமப் பொட்டிட்டு
சவ்வாது சரசரக்க
சந்தனமோ எனும் தென்றல்
இன்பமாய் என்னுள் நுழைய
அழகு மயிலோ இவள்
என
என்னருகில் அமர்ந்தாள்
அமர்ந்ததால்—
பூவுலகும் பொன்னுலகும்
என் காலடியில்...
ஆசைத் தேன் கலந்து
அன்பினால் அணைத்தெடுத்து
பால் பழம் என்றே நீ தா
என்று—
செம்பவளக்கரம் தொட்டு
தாயே
சரணம் நீ என்று நான்
பொன்னுலகம் வேண்டி நிற்பேன்
வருவது நிச்சயம்
சொர்க்கம் அதுவென்று
தினம் என் நா பாடும்.

07.08.84

## விடியல்கீதம்

என் பிரிய நிலவே
உரை நடையாகிப் போன என் இதயராணியே!
நீ தான் நிலா
என்றிருந்த பொழுதுகளில்
காற்றுக் கூட நுழைந்ததில்லை
இன்று மட்டும்—
புயல் ஏன் அனுமதியின்றி நுழைந்தது?
கோடை மாறி மழை பொழிந்தாலும்
செம்மண் அழிந்து பாலைவனமாகிப்போனாலும்
கவிதையாகிப் போன என் வடிவமே
எழுந்திரு!
நமது தூக்கத்தால் புயல்
நம்மை அழித்து விடப் போகின்றது
நமது காதல் உள்ள வரை—
வயல் வெளிகளும்
பனைமர உச்சியும்
சோலைக் குயில்களும்
கந்தனின் ஊர்வலமும்
நிலைத்திருக்கும் உணர்ச்சிகளுடன்...
நமது உடல்கள்
அழிக்கப்பட்டு விட்டால்
இயற்கை கூட அழிந்து விடுமே!
தேவியே...
தூக்கம் கலைந்து எழுந்திரு!
விடியல் கீதங்களை இனியாவது
ஒன்றாய் இசைக்கலாம் வா!

□ 8.12.84

# எமது வெளியீடுகள்

## கவிதைகள்

| | |
|---|---|
| சுந்தரபாண்டியன், பகல்கனவுகள் | 3-00 |
| இறையடியான், ஊமை கனவுகள் | 5-00 |
| சிவசேகரம், நதிக்கரை மூங்கில் | 6-00 |
| பாலா, நீயும் நீயும் நானும் நானும் | 12-00 |
| மணி, முதல் மின்னல் | 7-00 |
| காவியன், விடியும் வரைதான் | 10-00 |
| ப்ரதிபா ஜெயசந்திரன், புத்தகத்திலிருந்து புறப்பட்ட பிரதிமைகள் | 7-00 |
| சுஜாதா, நைலான் ரதங்கள் | 12-00 |
| இரா. நடராஜன், கறுப்பு யுத்தம் | 10-00 |

## சிறுகதைகள்

| | |
|---|---|
| காவேரி, ஓசைகள் | 18-00 |
| சி.ஆர்.ரவீந்திரன், ரிவோல்ட் | 12-00 |
| சுபஸ்ரீ, பதினோராம் நாள் மனிதன் | 25-00 |

| | |
|---|---|
| பாவண்ணன், வேர்கள் தொலைவில் | 12-00 |
| ” வெளியேற்றம் | 15-00 |
| சுப்ரபாரதிமணியன் (தொ) ஹைதராபாத் எழுத்தாளர் சிறுகதைகள் | 15-00 |
| கண்ணன் மகேஷ், பொழுது விடியட்டும் | 21-00 |
| சுப்ரபாரதிமணியன், மாறுதடம் | 15-00 |

## நாவல்கள்

| | |
|---|---|
| சுந்தரபாண்டியன், கன்னடியர் மகள் | 7-00 |
| ” திப்புசுல்தான் | 12-00 |
| காவேரி, ஆத்துக்குப் போகனும் | 15-00 |
| தமிழவன், ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் | 16-00 |
| அனந்தமூர்த்தி, சதாசிவம் (தமிழில்) சமஸ்காரா | 14-00 |
| இந்திரா, இறையடியான் (தமிழில்) பணியம்மா | |

## ஆய்வுகள்


Dr. சண்முகசுந்தரம்,

| | |
|---|---|
| திருநெல்வேலி மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள் | 50-00 |
| வள்ளுவர்கள் | 10-00 |
| குறள் குறள் குறள் | 10-00 |

| | |
|---|---|
| மூங்கில் இலைமேலே வைரமுத்துவரை | 11-00 |
| Dr. மாரியப்பன், தமிழக வரலாறு | 7-00 |
| ,, சோசலிச எதார்த்தவாதம் | 8-00 |
| பு. சி. கணேசன், கநாசுவும் கைலாசபதியும் | 10-00 |
| தமிழ்நாடன், (தொ.) சேலம் மாவட்டம் | 16-00 |
| Dr. சிவசண்முகம், பசவண்ணர் | 14-00 |
| சமுத்ரன், இலங்கை தேசிய இனப்பிரச்னை | 8-00 |

*விமர்சனங்கள்*

| | |
|---|---|
| சுஜாதா, விவாதங்கள் விமர்சனங்கள் | 20-00 |
| வைரமுத்து, நேற்றுப் போட்ட கோலம் | 10-00 |
| க.நா.சு., இலக்கியத்துக்கு ஓர் இயக்கம் | 15-00 |
| இலக்கு, எழுபதுகளில் கலை இலக்கியம் | 16-00 |
| ,, எதார்த்தவாதமும் தமிழ் நாவல்களும் | 12-00 |
| ,, புதுக்கவிதையும் புதுப்பிரக்ஞையும் | 16-00 |
| டீயென்னெ, காற்றுவெளி சிறைச்சாலை | 8-00 |
| தமிழவன், படைப்பும் படைப்பாளியும் | |
| ப. கிருஷ்ணசாமி, க.நா.சு. இலக்கியத்துவம் | |



"ஈழத்துக் கவிஞரான இவர் சவுதி அரேபியாவில்
வசிக்கிறார். ஏற்கனவே 'விடியத் துடிக்கும்
ராத்திரிகள்' புதிய அடிமைகள், நித்ய கல்யாணி
ஆகிய கவிதைத் தொகுதிகளை தமிழுக்குத்
தந்திருப்பவர். இப்போது 'யுத்த காண்டம்'. இந்த
இளங்கவிஞரின் கவிக்கனவுகள் தொடரும்
என்பதற்கான தடயங்கள் இந்நூலில் நிறைய
உள்ளன."

Printed at: SRI YESES PRINT HOUSE,
MADRAS – 600 014, Phone 833231, 417141